சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 180/2022

பெயர். திரு. சதீஷ் குமார் த/பெ. நாள் 17.03.2025

**<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) ம.த.சா.ஆ.2ல் விவரங்கள் என் மனைவி சொல்லி எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் சரிதான். ம.த.சா.ஆ.4ல் கண்ட விவரங்கள் சரிதான். நான் தற்பொழுது எவ்வித வேலையும் செய்யவில்லை. விபத்தின்பொழுது நான் கொத்தனார் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். கொத்தனார் வேலைக்கு சென்றதாக மனு மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் சொற்ப காயங்கள் என்றால் சரியல்ல. எனக்கு மூக்கு மற்றும் தலையில் அடிப்பட்டது. நினைவாற்றல் குறைவாக உள்ளது. ம.த.சா.ஆ.2ல் மேற்சொன்ன காயங்கள் இல்லை என்றால் சரிதான். நான்தான் நின்று கொண்டிருந்த 1ம் எதிர்மனுதாரர் வாகனம் மீது மோதினேன் என்றாலும், அதனால் ஒரு நாள் கால தாமதாக புகார் அளிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. ம.த.சா.ஆ.3ல் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பின்னால் சேதம் ஏற்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். முன்பக்கத்தில் எவ்வித சேதமும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

2) என்னுடைய இருசக்கர வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பப்பட்டது. அந்த ஆய்வறிக்கை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே நான் வாகனத்தின் ஆய்வறிக்கையை தாக்கல் செய்தால் உண்மை விவரங்கள் தெரிந்துவிடும் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் முழு காரணம் என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்னுமதாரர் வாகனத்திற்கு முறையான போக்குவரத்து அனுமதிச்சீட்டு இல்லை என்றாலும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்கடமைப்பட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மனுவிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் அனைத்தும் என்னுடைய ஆவணங்கள் படி சொற்ப காங்கள் என்றாலும், எனக்கு எவ்வித கொடுங்காயங்களும் எற்படவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.